# சாட்சிய வாக்குமூலம்
## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- திருமதி. ஆர். சத்யதாரா, எம்.ஏ., எம்.எல்.,

அசல் வழக்கு எண். 13/2022

நாள் : 09.06.2026

பி. வா.சா. : 1

பெயர் : சமீம்பானு

சாட்சி திருமதி. வீ. அமுதப்பிரியா. இருக்கை நிலை எழுத்தர் – 2 என்பவரால் உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

என் கணவர் பெயர் ஹாஜமைதீன். அவர் துபாயில் வேலை பார்த்து வந்தார். அவர் முதல் மனைவி இறந்த பிறகு என்னை திருமணம் செய்துகொண்டார். எனக்கென்று தனிப்பட்ட வருமானமோ சொத்தோ கிடையாது என்றால் சரிதான். தாவா வீடு சம்பந்தமாக சாதிக்பாட்ஷா என்பவரிடமிருந்து தாவா சொத்தின் கீழ்மனையை என் கணவர் 2011 ல் வாங்கிவிட்டார். அந்த மனையில் அவரின் வெளிநாட்டு வருமானத்தை கொண்டு வீடு கட்டினார் என்றால் சரியல்ல. அந்த வீட்டை 2015ல் என் சகோதரி பெயரில் செட்டில்மெண்ட செய்து வைத்தேன் என்றால் சரியல்ல. என் சகோதரி 2017 ல் எனக்கு செட்டில்மென்ட் செய்தார் என்றால் சரிதான். நான் முதலில் என் சகோதரிக்கு செட்டில்மென்ட் செய்து கொடுத்த சொத்தை எனக்கு மீண்டும் அவர் செட்டில்மென்ட் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். கத்தீஜா பீவி என்பவருக்கு இந்த சொத்தை விற்பதற்காக கிரயம் பேசினோம் என்றால் சரிதான். அந்த விவரம் தெரிந்தவுடன் என் கணவர் வெளிநாட்டிலிருந்து வந்தார். அதனால் எனக்கும் என் கணவருக்கும் கருத்துவேறுபாடு வந்தது என்றால் சரியல்ல. அந்த கருத்துவேறுபாடு தொடர்பாக என் கணவர் அரங்ககுடி ஜமாத்தில் பிராது கொடுத்தார் என்றால் சரிதான். அதில் என்னை அவர் விவாகரத்து செய்யக்கோரி கேட்டார் என்றால் சரியல்ல. வீடு சம்பந்தமாக கேட்டார். நான் கிளியனூர் ஜமாத்தை சேர்ந்தவர் என்பதால் இரண்டு ஊர் ஜமாத்தும் சேர்ந்து பேசினார்கள் என்றால் சரிதான். 28.08.2019 அன்று இரண்டு ஊர்

S. சமீம் பானு

ஜமாத்தாரும் பேசியபடி என் கணவர் எனக்கு 18 லட்சம் கொடுத்துவிடவேண்டுமென்றும் நான் அவருக்கு வீட்டை எழுதிக்கொடுத்துவிடவேண்டும் என்ற வாசா 1 என்ற ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஜமாத்தில் வீட்டை விற்க கூடாது என் கணவர் பெயருக்கு எழுதிக்கொடுத்துவிட வேண்டுமென்றுதான் பேசினார்கள். வாசாஆ 1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. என் கணவரும் என் அப்பாவும் கையெழுத்து போடவில்லை. இது தவிர வேறு எந்த கையெழுத்தும் போடவில்லை. வாசாஆ 2 ஆவணத்தின்படி என் கணவர் எனக்கு பல தவணைகளில் 18லட்சம் பணத்தை கிளியனூர் ஜமாத்தில் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் அப்பா எந்த சாட்சி கையெழுத்தும் போடவில்லை. 17.11.2019 அன்று என் கணவர் பெயருக்கு தாவா சொத்தை பொறுத்து செட்டில்மெண்ட் எழுதி பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். 28.08.2019 அன்றே வீட்டை என் கணவருக்கு எழுதிக்கொடுக்க வேண்டுமென்று ஜமாத்தில் சொல்லப்பட்டது என்றால் சரிதான். செட்டில்மெண்ட் எழுதிகொடுக்க என் கணவர் கேட்காததால் மூன்று மாத கால தாமதம் ஏற்பட்டது. பாக்கி பணத்தை பெற்றுக்கொண்டு 17.11.2019 அன்று செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து உள்ள பகுதிக்கு நரிக்குடி என்று பெயர் என்றால் சரிதான். அது பிறகு அரங்கக்குடி ஜப்பார் தெரு என்று மாற்றப்பட்டது என்றால் சரிதான். இரண்டு ஜமாத்தாருக்கும் எனக்கும் எதாவது பிரச்சனையா என்றால் இரண்டு ஜமாத்தாரும் சேர்ந்து சொத்தை அபகரிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் செயல்படுகிறார்கள். நடந்த அனைத்து உண்மைகளையும் மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஜமாத் பேச்சு வார்த்தைக்கு பிறகு நான் என் அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அவர் திருவண்ணாமலைக்கு சென்று விட்டார். என் கணவர் அவர் நண்பர் மூலம் பணம் பெற்று ஜமாத்தில் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த பணத்தை வாதி என் கணவருக்கு கடனாக கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் கிளியனூருக்கு சென்ற பிறகு வீட்டை ஜமாத்தாரிடம் கொடுத்தேன் என்றால் நான் பூட்டி வைத்திருந்த தாவா வீட்டின் கதவை ஜமாத்தார்கள் உடைத்து வேறு ஒருவருக்கு வாடகைக்கு விட்டுவிட்டார்கள். என் கணவர் வாதியிடம் வாங்கிய கடனுக்காக ஒரு ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. 12.10.2020 என் கணவர்

ச.சமீம் பானு

இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் கணவர் இறந்த பிறகு தாவா சொத்தில் பாகம் கோரி சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த வாதியை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் முதல்நிலை தீர்ப்பாணையாகிவிட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்புரையில் வாதிக்கு கொடுக்க வேண்டிய பணம் குறித்து தனியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்றும், 3ம் பிரதிவாதி தாவா சொத்தின் சுவாதீன அனுபவத்தில் இருப்பது குறித்து தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கும் ஊருக்கும் என்ன விரோதம் என்றால் வீட்டைஎழுதிக்கொடுக்க மாட்டேன் என்று சொன்னதிலிருந்து பிரச்சனை. ஊரில் உள்ள சொத்துக்களை அபகரிப்பது ஜமாத்தில் வேலை இல்லை என்றால் என்னுடைய சொத்தை அபகரிக்க ஜமாத் செயல்படுகிறது. என் கணவர் வாதிக்கு உடன்படிக்கை எழுதிக்கொடுத்திருக்கிறார் அதன்படி 19,60,000/- ரூபாய் கடனாக பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வாதிக்கு அவர் கேட்டபடி பணம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல. வாதி தனக்கு சொத்து வேண்டாமென்றும் பணம் கிடைத்தால் போதுமென்றும் சொல்லியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. உடன்படிக்கையின்படி என் கணவருக்கு வாதி பணம் கொடுத்திருப்பதால் இந்த சொத்தின்பேரில் சார்ஜ் வாதிக்கு கிடைக்ககூடியது என்றால் சரியல்ல. நான் சொத்தையும் எடுத்துக்கொண்டு பணத்தை கொடுக்ககூடாது என்பதற்காக பொய்யான சாட்சியாடுகிறேன் என்றால் சரியல்ல.

S. சமீம் பானு

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை
9/4/26